# இயேசுவே பதில்

# (மாற்கு 2:1-12)

உங்களைப்பற்றிய எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியாது, ஆனால், ஒன்று தெரியும், நீங்கள் சில பிரச்சனைகளினால் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்தப் பிரச்சனை ஆவிக்குரியதாகவோ, ஆரோக்கியத்திற்குரியதாகவோ, பொருளாதார ரீதியானதாகவோ, குடும்பப் பிரச்சனையாகவோ, அல்லது, உணர்வு ரீதியான பிரச்சனையாகவோ இருக்கலாம். எப்படியும், ஒரு பிரச்சனையோடு நீங்கள் போராடுகிறீர்கள். நாம் எல்லோருமே ஏதோ சில விஷயங்களோடு போராடிக்கொண்டு தான் இருக்கிறோம், நமது பிரச்சனை எதுவாக இருப்பினும், இயேசு அதற்கு பதிலாக இருக்கிறார், என்பதை இப்பாடத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

புதிய ஏற்பாடு முழுவதும் இந்த மாபெரும் சத்தியத்தையே அறிவிக்கிறது. ஆனால், நமது பாடத்திற்கென்று மாற்கு 2:1-12 ல் காணப்படும், கிறிஸ்துவின் வாழ்வில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தை எடுத்துக்கொள்வோம்.

## நான்கு நண்பர்களும் வியாதிப்பட்ட மனிதனும் (மாற்கு 2:1-4)

“சில நாட்களுக்குப் பின்பு, அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்கு போனார், ...” (வ. 1அ) என்று இந்தப்பகுதி தொடங்குகிறது. கலிலேயாவில் இயேசுவின் ஊழியங்களின் மையப் பகுதியாக கப்பர்நகூம் விளங்கியது. மாற்கு முதல் அதிகாரத்தில் அவருடைய முந்திய பயணத்தைப் பற்றி நாம் படிக்கிறோம் (1:21ff). அச்சமயத்தில் அவர் அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனையும் (1:23-27) பேதுருவின் மாமியையும் (1:29-31) குணப்படுத்தினார். அந்த நாள் ஒரு மாபெரும்

குணப்படுத்தும் ஊழியத்தில் முடிந்தது (1:32-34). இப்பொழுது, இயேசு மறுபடியும் கப்பர்நகூமுக்கு வந்தார்.

கலிலேய ஊழியத்தின் முடிவில் அவர் அமைதியாக ஓரிடத்திற்கு செல்ல விரும்பியிருக்கக்கூடும் (1:35, 45 கவனிக்கவும்). ஆனால் " அவர் வீட்டில் இருக்கிறார்" என்று கேள்விப்பட்டார்கள் (வ. 1ஆ).[1] "இயேசு திரும்பிவிட்டார்," என்ற பேச்சு ஜனங்களிடையே பரவிற்று.

"உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்" (வ. 2அ). அந்நாட்களில் உபசரிப்பு என்பது வாழ்வின் ஒரு அம்சமாக இருந்தது. பகல் நேரத்தில் சாதாரணமாக கதவுகள் திறந்தே இருக்கும். ஜனங்கள் தங்கள் விருப்பத்திற்கு போக வர முடியும். இயேசு தங்கியிருந்த வீடு விரைவிலேயே நிரம்பிற்று. ஜனக் கூட்டம் கதவு வரை அலை மோதிற்று.

2ம் வசனத்தின் முடிவில் ''அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்'' என்று இருப்பதைக் கவனியுங்கள். இயேசு இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் (லூக். 19:10). அவருடைய திட்டத்தில் இதுவே முதன்மையாக விளங்கிற்று. இவ்வாறாக, அவர் அந்த வாய்ப்பை வசனத்தைப் போதிக்க பயன்படுத்தினர்.

நான்கு நண்பர்களின் சம்பவம் இவ்விதமாய் தொடங்குகிறது. அப்பொழுது நாலு பேர் ஒரு திமிர்வாதக்காரனை,[2] சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள் (வ. 3). இந்தக் காட்சியை சற்று நாம் கற்பனை செய்து பார்ப்போம். இந்த நான்கு மனிதர்களுக்கு வாத நோயாளியான ஒரு நண்பன் இருந்தான். அவன் நகர முடியாதவனாக இருந்தான். ஆனால், இது நமக்கு முழுமையானதாக இல்லை. அதிகாரம் உள்ளவர்கள் அவனுக்கு வாத நோயோடு காக்கை வலிப்பு போன்ற வியாதியும், வாய்க்குளறும் வியாதியும், இருந்தது என்கிறார்கள்.

> தசைகளின் கட்டுப்பாடு இழக்கப்பட்டது; ஆனால் திடீரென்று வலி ஏற்பட்டு வியாதியஸ்தன் கீழே விழுவான், உதவியற்று திமிருவான். இப்படிப்பட்ட பாதிப்பு அடிக்கடி நேரும், மரணம் ஒன்றே இதிலிருந்து விடுதலை அளிக்கும்.[3]

இந்த மனிதன் உடல் நிலை மிகப் பயங்கரமாக இருந்தது!

இயேசுவின் முந்தைய கப்பர்நகூம் ஊழியத்தில் இந்த

மனிதன் ஏன் கொண்டு வரப்படவில்லை, என்பது நமக்குத் தெரியாது. ஒருவேளை அவனோ, அவனுடைய நண்பர்களோ அந்த சமயம் பட்டணத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது, கடைசி நேரத்தில் கொண்டு வரலாம் என்று காத்திருக் கலாம். எப்படியிருப்பினும், இந்த சமயத்தில் நான்கு நண்பர் களும் சந்தர்ப்பத்தை இழக்க விரும்பவில்லை. அவர்கள் அவனை இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். தரையில் விரித்துப்படுக்கும் படுக்கையோடு மூலைக்கு ஒருவராக அவனைத் தூக்கி வந்தார்கள்.

இங்கே இயேசுவே பதில்-உண்மையில் தங்களுடைய நண்பனின் பிரச்சனைக்கு அவர் மாத்திரமே தீர்வளிக்க முடியும், என்பதை உணர்ந்த நான்கு தனி நபர்களை காண்கி றோம். வ. 5 அவர்கள் விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது. அவர்கள் இயேசுவின் மேல் எப்படிப்பட்ட விசுவாசம் வைத்திருந் தார்கள்?

**இயேசுவின் உதவி செய்யும் வல்லமையில் விசுவாசம்**

முதலாவது, அந்த நான்கு நண்பர்களும் இயேசு உதவி செய்யும் வல்லமையை பெற்றிருந்தார், என்று விசுவாசம் கொண்டனர்.[4] அந்த வல்லமை கப்பர்நகூமில் முன்பு இயேசு இருந்தபோது, காண்பிக்கப்பட்டது. அப்போதுதான் அவர் முடித்திருந்த மாபெரும் கலிலேய பயணத்திலும், அந்த வல்லமை விளங்கப்பட்டது.

நாம் உணர வேண்டிய முக்கியமான ஒன்று உள்ளது. நம் எல்லோருக்கும் பிரச்சனைகள் உண்டு. சில வேளைகளில் நமது பிரச்சனையைப் போல வேறு யாருக்குமே இதுவரை ஏற் பட்டிராது என்று நம்புகிறோம். அவைகளுக்குத் தீர்வு இல்லை என்றும், ஒருவருமே நமக்கு உதவ முடியாது என்றும் நினைக் கின்றோம். “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.” (லூக். 1:37) என்பதை உணர்வது மிகவும் முக்கியம்.

**இயேசுவின் உதவி செய்யும் விருப்பத்தில் விசுவாசம்**

இந்த மனிதர்களுடைய விசுவாசம், இதை விட இன்னும் அதிகமாய் இருந்தது. இயேசு தன்னுடைய வல்லமையை

உபயோகிப்பதை விரும்பினார், என்றும் விசுவாசித்தார்கள். இதற்கு பல காரணங்கள் உள்ளன. கடந்த முறை கப்பர்நகூமுக்கு இயேசு வந்தபோது ஜனங்கள்மேல் தாம் கொண்டிருந்த பரிவை பல வகையில் காட்டினார். ஆனாலும், சமீபத்தில் கலிலேயாவில் அவர் செய்த ஒரு அற்புதம், அவருடைய இரக்கக் குணத்தை நன்றாய் விளக்கிற்று.

அந்த பயணத்தில் நடந்த அற்புதம் ஒன்று விளக்கிக் கூறப்படுகிறது: குஷ்டரோகி சொஸ்தமடைதல். அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு; "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்," என்று வேண்டிக்கொண்டான் (மாற்கு 1:40). இயேசுவின் பதில் செயலாக, இதற்கடுத்து கூறுகிற வசனத்திலே நாம் சுலபமாக தவறவிடுகிற வார்த்தை ஒன்று இருக்கிறது. இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: "எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு" என்றார் (வ. 41).

அநேக வருடங்களுக்கு முன், பெல் தொலைபேசி கம்பெனியார்: "யாரேனும் சிலரை அடைந்து அணுகுதல்,"[5] என்ற கருத்தோடு விளம்பர முகாம் ஒன்றை நடத்தினர். விளம்பரத்தில் "யாரேனும் சிலர்" என்பது, எப்பொழுதுமே ஒரு குடும்பம், ஒரு நண்பர், அன்பு செய்கிற ஒருவராகவே இருந்தார்கள். அவர்கள் எதையேனும் இழந்தவர்களாகவோ, அழுக்கான அல்லது வியாதிப்பட்டவர்களாகவோ இல்லை.[6] எப்படி இருப்பினும் இயேசு ஒரு குஷ்டரோகியை அணுகி அவனைத் தொட்டார்.

அந்த நாட்களில் குஷ்டரோகம் என்பது, பயங்கரமான தொற்று நோயாகவும், நரம்பு நோயாகவும் கருதப்பட்டது. குஷ்டரோகிகள் சமுதாயத்தின் மற்றவர்களிடம் இருந்து, விலகியிருக்க வேண்டும் எனப்பட்டது. குஷ்டரோகியை ஒருவரும் ஒருக்காலும் தொடமாட்டார்கள், இருப்பினும் இயேசு 'கையை நீட்டி அவனைத் தொட்டார்.'

இயேசு அவனை ஏன் தொட்டார்? குணப்படுத்தும் காரியத்தில் அது அவசியமாய் இருந்ததா? நான் சந்தேகப்படுகிறேன்.[7] துன்பப்படுகிற ஒருவரை நாம் தட்டிக் கொடுப்பது போல, ஏதேனும் இழந்தவரது முதுகிலே நாம் கை வைத்து அணைப்பது போலத்தான் இயேசுவும் அவனைத் தொட்டிருப்பார் என்று எண்ணுகிறேன். மறுபடியும் இந்த வசனத்தைக்

கவனியுங்கள்: "இயேசு மனதுருகி, கையை நீட்டி அவனைத் தொட்டு."

இயேசு மனதுருக்கம் உள்ளவர் என்று நம்பாத பட்சத்தில் இந்த நான்கு நண்பர்கள் ஒன்றும் செய்திருக்கமாட்டார்கள். இந்த உண்மையை நாம் உணர வேண்டும். இயேசு பிரச்சனைகளுக்குத் தீர்வாக மாத்திரமல்ல; நம்மேல் மனதுருக்கமாயும் இருக்கிறார். அவர் நமக்கு உதவி செய்ய விரும்புகிறார்.

அந்த மனிதர்கள் தங்களுடைய நண்பனை இயேசுவிடம் கொண்டு வந்தபோது ஒரு தடை ஏற்பட்டது. "ஜனக்கூட்டத்தின் நிமித்தம் அவருக்குச் சமீபமாய் சேரக்கூடாமல்" (வ. 4அ).[8] அந்த வீடு நிறைந்திருந்தது. வாசலுக்கு முன் நிறைய ஜனங்கள் கூடியிருந்தார்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள் (வ. 2). அந்த நான்கு பேரில் ஒருவனாக நான் இருந்திருந்தால், "நம்மால் ஆனதை நாம் செய்தோம். இப்பொழுது வீட்டுக்கு போகலாம்" என்று சொல்லியிருப்பேன். அல்லது குறைந்த பட்சம், கூட்டம் குறையும் வரைக்கும் நமது நண்பனை ஒரு மர நிழலில் வைக்கலாம். என்றாவது சொல்லி இருப்பேன்.[9] அந்த நான்கு நண்பர்கள் இவைகளில் எதையும் செய்யவில்லை. தங்களின் நண்பரின் பிரச்சனைக்கு இயேசு ஒருவரே தீர்வு என்று அறிந்த அவர்கள் கீழ்க்கண்ட மூன்று காரியங்களை செய்தார்கள்.

1) அவர்கள் கடினமானதை செய்தார்கள்:[10] அவர்கள் தங்களது நண்பனை கூரையின்மேல் கொண்டு சென்றார்கள். நான் ஒரு பையனாக இருந்தபோது, வேதவகுப்பில், நாம் பயன்படுத்துகின்ற சிறு பட அட்டைகள் வெளிப்புறம் மாடிப்படி உள்ள ஒரு வீட்டை காண்பிக்கும். ஒருவேளை இந்த வீடு அப்படி படிகளை உடையதாக இருக்கலாம். அப்படி இருந்தாலும், திமிர்வாதம் கொண்ட ஒரு மனிதனை படுக்கையில் கிடத்தி, படியின்மேல் கொண்டு செல்லுவது என்பது மிகக் கடினமானதுதான்.[11] எப்படியிருப்பினும், அந்த வீடு இவ்விதமான படிகளைக் கொண்டிருந்தது என்று நம்ப ஆதாரம் இல்லை. உலகின் அப்பகுதியில் அப்பொழுது வீடுகள் பக்கம் பக்கமாக கட்டப்பட்டன. வெளிப்புறமான படிக்கட்டு இருப்பினும் அது இரண்டு வீடுகளுக்கு அப்பால்தான் இருந்திருக்கும். அந்த நான்கு மனிதர்கள் அப்படி சென்றிருந்தால் இரண்டு கட்டிடங்களின் கூரைகளின் மேல் தாவித்தாவி

சென்றிருக்க வேண்டும். நான் நினைப்பது என்னவென்றால் அவர்கள் ஒரு பழைய ஏணியை அங்கு கண்டு, வீட்டின் மேல் அதைச் சார்த்தி அந்த ஏணியின் மேல் தங்கள் நண்பனை வலித்து இழுத்திருக்க வேண்டும். எப்படியும் தங்கள் நண்பனை மேற் கூரையின் மேல் கொண்டு செல்வதற்காக இவ்வித கடினமான காரியத்தை அவர்கள் மேற்கொண்டனர்.

*2) எதிர்பாராததை அவர்கள் செய்தனர்:* ''அவர்கள் மேற்கூரையை பிரித்தனர்'' (வ. 4ஆ) என்று வசனம் கூறுகிறது. அந்நாட்களில் சுவர்களின் குறுக்கே, அறுத்த மரங்களை போட்டு கூரை வேய்ந்தனர். அம்மரங்களின் மேல் கிளைகளும், மெருகு பொருட்களும் போடப்படும் அப்பொருளின் மேல் சேரும், வைக்கோலும் போடப்படும். அந்த சேற்று மண் சமப்படுத்தப்பட்டு சூரிய வெயிலில் காயவைக்கப்படும். இந்த நான்கு மனிதர்கள் மேல் கூரையை பிரித்து "திறப்பாக்கினர்" (வ. 4இ).[12]

*3) அவர்கள் விலையேற்றப்பெற்ற செயலை செய்தனர்:* ஒரு நிமிடம் அந்த வீட்டின் உரிமையாளருடைய நிலையில் நீங்கள் உங்களை வைத்துப் பாருங்கள். நீங்கள் இயேசுவின் போதனையை கவனித்துக் கேட்டு கொண்டிருக்கிறீர்கள். திடீரென்று கூரையின் மேல் ஒரு சத்தத்தை கேட்கிறீர்கள், தூசியும், மண் கட்டியும், கூரையில் உள்ள மற்ற பொருட்களும் விழத் தொடங்குகின்றன. நீங்கள் மேலே பார்க்கிறீர்கள், உங்கள் வீட்டுக்கூரை இடிந்து கொண்டிருக்கிறது. நீங்கள் என்ன நினைப்பீர்கள்? ஒரு வேளை ''யார் இந்தக் கூரையை சரி பார்ப்பது?''[13] 'அந்த நான்கு பேர் தான்' என்பதே அதற்கு பதிலாக இருக்கலாம். ஒன்று அவர்கள் கூரையை சரிசெய்ய வேண்டும் அல்லது அதற்குரிய தொகையை செலுத்த வேண்டும், அவர்கள் செய்தது ஒரு விலையேறப்பெற்ற ஒரு காரியம். இருப்பினும், தங்கள் நண்பனை இயேசுவினிடத்தில் கொண்டு வருவதற்காக இதை அவர்கள் தயங்காமல் செய்தனர்.

குழந்தையின் வகுப்பில் நட்பைக் குறித்து விளக்குவதற்காக இச்சம்பவம் பயன்படுத்தப்படுகிறது. என்ன ஒரு அற்புதமான நண்பர்கள் இந்த நான்கு பேரும் - நமக்கு இது என்ன ஒரு நல்ல முன் மாதிரி! நாம் எல்லோருமே யாருக்கெல்லாம் கர்த்தர் தேவை என்பதை அறிவோம். ஒரு வேளை அவர்கள் துன்பப்

படலாம். ஒரு வேளை அவர்கள் வாழ்க்கை சிக்கலாகி இருக்க லாம். ஒரு வேளை அவர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதை அவர்கள் உணராமல் கூட இருக்கலாம். இப்படிப்பட்டவர் களை இயேசுவினிடத்தில் கொண்டு வர எப்படிப்பட்ட முயற்சிகளை நாம் எடுக்கின்றோம்? ஒரு முறை அவர்களை அழைத்து அவர்கள் அதை மறுத்தவுடனே நல்லது நாம் முயற்சி பண்ணினோம் என்று கூறிவிட்டு மறுமுயற்சி செய்யாமல் இருப்பது சாத்தியமா? கூட்டம் கலைந்து போய் அதிக வசதியாய் இருக்கின்றவரை காத்திருப்பது சாத்தியமா?

நாம் இதை சந்திப்போம்: நம்மில் அநேகர் கர்த்தரிடத்தில் ஜனங்களைக் கொண்டுவருவது மிகக் கடினம், என்பதை உணர்கிறோம். வழியில் ‘‘கூட்டம்’’ இருக்கிறது, நம்முடைய நண்பர்களுடைய அவசர செயல்பாடுகள், நமது அவசர செயல் பாடுகள், நமது நண்பர்களுடைய அக்கறையின்மை மற்றும், நமது அக்கறையின்மை ஆகியவை வழியில் நிற்கின்றன. எப்படியிருப்பினும், நாம் நேசிப்பவர்களின் பிரச்சனைகளுக்கு இயேசு ஒருவரே தீர்வாயிருக்கிறார், என்று நமது இருதயங்கள் முழுமையாக நம்பிவிட்டால், அவர்களை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஒரு வழி காணும்வரை நாம் ஓய மாட்டோம். கடினமானதை, எதிர்பாராததை, விலையேறப் பெற்றதை நாம் விருப்பத்தோடு செய்வோம்.[14]

## இயேசுவும் வியாதிப்பட்ட மனுஷனும் (மாற்கு 2:5-12)

இப்பொழுது நாம் இச்சம்பவத்தின் நிறைவுப் பகுதிக்குத் திரும்புவோம். இயேசுவும் வியாதிப்பட்ட மனுஷனும்- இயேசுவே எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வாக இருக்கிறார், என்பதைக் காணுங்கள். கவனம் நான்கு மனிதர்களைவிட்டு இயேசுவுடன் திரும்பட்டும்.

> ... அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப்பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: “மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது”

என்றார் (வ. 4ஆ-5).

அந்த அறையில் இருந்த கூட்டத்தாரின் முன்னிலையில் இயேசு நிற்பதைக் கற்பனை செய்து பாருங்கள். தேவனுக்குரிய வைகளை அவர் ஊக்கமாய் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். திடீரென்று மண் துகளும், கட்டிகளும், கூளங்களும் அவரைச் சுற்றிலும் விழத்தொடங்கின. அவர் மேலே பார்க்கும் போது கூரை இடிக்கப்படுவதைக் கண்டார். ஒரு தோண்டப்பட்ட துளை தோன்றியது, அந்தத் துளையின் விளிம்பில் நான்கு முகங்கள் உற்றுப் பார்த்தன, எட்டுக் கைகள் அத்துளையின் விளிம்பைப் பேர்த்துக் கொண்டிருந்தன. இறுதியாக, துளை வேண்டிய அளவு பெரியதாயிற்று. அம்மனிதர்கள் மிகவும் ஜாக்கிரதையாக தங்கள் நண்பனை அத்துளை வழியே, தரையின் மேல் இயேசுவுக்கு முன்பாக இறக்கினர். இயேசுவின் பதில்செயல் எப்படியிருந்தது? நீங்களோ அல்லது நானோ இதற்கு எவ்விதம் பதில் செயலாற்றியிருப்போம்?

ஞாயிறு காலை ஆராதித்துக் கொண்டிருக்கும் ஒரு சபையாரைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். வசனத்திலிருந்து மிகத்திறமையாக ஒரு ஊழியர் பிரசங்கிப்பதை அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று மேற்கூரையின் மேல் ஜனங்கள் நடப்பதை அவர்கள் கேட்கின்றனர். கட்டிட வேலையாட்கள் கூரையின் மேல் அடித்து இடிப்பது, ரம்பங்கள் அறுப்பதுமாகிய ஓசை கேட்கின்றது.[15] கூரையில் ஒருபகுதி வட்டமாக வெட்டப் பட்டு, கூரையின் அப்பகுதி கீழே பெருத்த ஓசையுடன் விழுகிறது. அவர்கள் கவனித்துப் பார்க்கையில், ஒரு படுக்கையின்[16] நாலு முனைகளிலும் கயிறு கட்டப்பட்டு, அதில் ஒரு மனிதன் பிரசங்க மேடைக்கு முன்பாக இறக்கப்படுகிறான். அவர்களுடைய பதில்செயல் எப்படியிருக்கும்? ‘‘ஏய்! எல்லோரும் போல நீங்களும் ஏன் முன்வாசல் வழியாக வரக்கூடாது?’’ என்று கேட்கலாம். பெரும்பாலும், “என்ன தைரியம் இருந்தால் கூரையை இடிப்பீர்கள்!” “என்ன தைரியம் இருந்தால் ஆராதனைக்கு இடையூறு செய்வீர்கள்! இங்கு முக்கியமான காரியம் நடப்பது உங்களுக்குத் தெரியாதா?’’ என்ற ஆவேசமான கூச்சலே இதற்குப் பதில் செய்கையாக

இருக்கும்.

இயேசுவும் கூட, "இது என்ன முரட்டுத்தனம்! நீங்கள் என் பிரசங்கத்தை இடைமறித்து விட்டீர்கள்! அது மட்டுமல்ல, இக்கூட்டத்தைக் கூட்ட தனது வீட்டைத் தாராளமாக அனு மதித்த இந்த வீட்டின் உரிமையாளரின் உபசரிப்புத் தன்மை யையும், நீங்கள் தவறாகப் பயன்படுத்தினீர்கள்" என்று கூறியிருக்கலாம். இருப்பினும் இயேசு இம்மாதிரியாகப் பதில் செய்யவில்லை. நாம் இடைமறிக்கக்கூடிய ஒரு கர்த்தரைப் பெற்றுள்ளோம், என்று உணர்வது நமக்கு வியப்பே. அவர் பல்வேறு முக்கியமான பணிகளில் ஈடுபட்டுள்ளார். "... சர்வத் தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் ..." இருக்கிறார் (எபிரேயர் 1:3). ஆனாலும் நாம் நமது பலவீனங்களுடன் அவரிடத்தில் சேர முடியும், அவர் நாம் சொல்வதைக் கவனித்துக் கேட்க நேரம் ஒதுக்குகிறார்.

இயேசு எவ்விதம் பதில்செயல் செய்தார்? அவர் தமது பாதத்தினருகில் கிடந்த அந்த மனிதனை உற்று நோக்கினார். அவனது சரீரத்திலிருந்த வியாதியை மட்டுமல்ல, அவனது இருதயத்தின் சோர்வையும் அவர் கண்டார். அவனுடைய கடந்த காலப் பாவங்களில் சில அவனது ஆத்துமாவை அரித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும், எனவே இயேசு திமிர்வாதக் காரனை நோக்கி, "மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டன" என்றார். மூல பாஷையில் "மகன்"[17] என்ற இந்த வார்த்தைக்கு, பாசத்துடன் கூறப்படும், "குழந்தை" என்ற அர்த்தமுள்ள வார்த்தை காணப்படுகிறது. அத்துடன் "மன்னிக்கப்பட்டன" என்ற வார்த்தை அதன் வல்லமையைக் காண்பிக்கும்படியாக, வாக்கியத்தின் முதலில் பயன்படுத்தப் பட்டுள்ளது.[18] இந்த வாக்கியம் இலக்கண ரீதியாக, "குழந்தை, மன்னிக்கப்பட்டன உன் பாவங்கள்" என்றுள்ளது.

திமிர்வாதக்காரனின் ஆவிக்குரிய பிரச்சனையின் நேரடி விளைவு அவனது சரீரத்தில் உள்ள பிரச்சனை என்று இவ் வசனம் நமக்கு போதிக்கிறதில்லை.[19] யோவான் 9ம் அதிகாரத் தில், நமது சொந்த பாவங்களுக்கும், நமது சரீரத்தில் உண் டாகும் பிரச்சனைகளுக்கும் எல்லா நேரத்திலும் நேரடித் தொடர்ப்பு இருப்பது கிடையாது (சில வேளைகளில் இது

*சாத்தியம்) என்பதை இயேசு வலியுறுத்துகிறார் (வ. 2ff). இயேசு அவனுடைய சரீரப்பிரச்சனைக்கு மேலாக அவனது ஆவிக்குரிய பிரச்சனையில் அதிக அக்கறை காண்பித்தார். மிக முக்கியமான பிரச்சனையின் மீதுதான் இயேசுவின் அக்கறை முதலாவது வெளிப்பட்டது.*

**பாவம் என்ற பிரச்சனைக்குத் தீர்வு**

*ஒவ்வொரு பிரச்சனைக்கும் இயேசுவே தீர்வாயிருக்கிறார் என்று கூறும்பொழுது, பாவம் என்ற பிரச்சனைக்கு அவரே முதலாவது மற்றும் முக்கியமான தீர்வாக இருக்கிறார், என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வியாதியஸ்தர்களைக் குணப்படுத்த மட்டுமே அல்லது நமது வாழ்க்கைப் பிரச்சனை களுக்குத் தீர்வு காணக்கூடிய புதிய உளவியல் அல்லது தத்து வத்தைத் தரமட்டுமே இயேசு இவ்வுலகிற்கு வரவில்லை, தேவன் இதற்காக ஒரு சிறந்த ஆசிரியரை அனுப்பியிருந்தாலே போதும். பரலோகத்தின் மிகப் பெரிய பொக்கிஷமான இயேசுவை, தமது ஒரே பேரான குமாரனான அவரை சிலுவை யில் மரிக்க அனுப்பியிருக்கத் தேவையில்லை! ஆனால் இயேசு, பாவம் என்ற பிரச்சனையைக் கையாள வந்தார். அவரால் மட்டுமே அது முடியும். "இழந்து போனதைத் தேடவும் இரட் சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தார்" (லூக்கா 19:10) என்று அவர் வலியுறுத்தினார்.*

*இந்த கணத்தில், உங்கள் உள்ளாக நீங்கள் வேதனைப்பட லாம், வலி நிறைந்து இருக்கலாம். உங்கள் உடலும், மனமும் விடுதலைக்காக கதறிக் கொண்டு இருக்கலாம், அந்த விடுதலை யை நீங்கள் பெற வேண்டுமென்றால், "என்னுடைய ஆவிக் குரிய நிலை என்ன? தேவனோடு எனது உறவு என்னவாயிருக்கி றது," என்று நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும்.*

*தாங்கள் தர வேண்டிய முன்னுரிமையை தலை கீழாய் செய்துள்ள ஒரு உலகத்தில் நாம் வாழுகிறோம். உதாரணத் திற்கு, உயிர்ச்சூழல் மற்றும் சுற்றுச்சுழல் பற்றி இன்றைய நாட்களில் நாம் அதிகமாய்க் கேள்விப்படுகின்றோம். நாம் இவ்வுலகம் பற்றி அக்கறை கொள்ள வேண்டும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். தேவன், மனிதனை இந்த பூமிக்குப்*

*பொறுப்பாளியாய் நியமித்து, நம்மிடத்தில் நல்ல உக்கிராணத் துவத்தைக் கொடுத்துள்ளார் (ஆதி. 1:28; 2:15). இருப்பினும் சில மனிதர்கள் மறுபடி மறுபடி, "மனித இனத்திற்கென்றுள்ள ஒரே வீடு இப்பூமி மட்டுமே" என சொல்லுவதைக் கேட்டுள்ளேன். அவர்களைப் பற்றி நான் ஒன்றும் அறியேன். ஆனால் எனக்கு இதைக் காட்டிலும் சிறந்த வீடு ஒன்று உண்டு (யோவான் 14:1-3). தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நடிகர்கள், பாடகர்கள் ஆகியோர் காற்று மற்றும் தண்ணீர் மாசுபடுதலைப் பற்றிக் கதறுகின்றனர். அதே வேளையில் அவர்கள் இளைஞர் களின் எண்ணங்கள், ஆத்துமாக்களை மாசு படுத்துகின்றனர்.*[20] *இந்த கிரகத்தின் மாசு படிதலில் நம்மில் யாரும் பங்கேற்க வில்லை என்று நான் நம்புகிறேன், ஆனால் இந்த பூமியானது என்றென்றும் உள்ள ஒரு வசிப்பிடமாகக் கருதப்படவில்லை (2 பேதுரு 3:10-13). இதை நம்பாதபோது, அழியாத ஆத்துமாக் கள் ஆக்கினைக்குள்ளாகும் விளைவை ஏற்படுத்துகிறது.*

*ஆவிக்குரியவைகள் சரீரத்துக்குரியவைகளைக் காட்டிலும் மிகவும் முக்கியமானவை என்பது வேதத்தில் தெளிவாய் போதிக்கப்பட்டுள்ளது. மாற்கு 2ல், இம்மனிதனின் சரீரத்தில் உள்ள பிரச்சனையைப் பற்றிக் கூறுமுன், இவனுடைய ஆவிக் குரிய பிரச்சனை பற்றி இயேசு அக்கறை காண்பித்தார். நீங்கள் எவ்விதப் பிரச்சனையினால் துன்பப்பட்டாலும், இயேசு முத லில் உங்கள் ஆவிக்குரிய பிரச்சனைபற்றி அக்கறை காட்ட அனு மதியுங்கள்.*

**வாழ்க்கையின் எவ்விதப் பிரச்சனைக்கும் தீர்வு**

*அம்மனிதனின் அடிப்படைப் பிரச்சனைபற்றி அக்கறை காட்டின பின்பு, அவனுடைய அடுத்த பிரச்சனையிலும் அக் கறை காட்ட முடியும், என்று தெளிவாக்க இயேசு தொடர்ந்து செயல்பட்டார்.*

*இயேசு பேசிய வேளையில் அங்கு அவரைக் குறை கூறுவோரும், இருந்தனர் என்பதை அடுத்த வசனம் குறிப்பிடு கிறது.*[21] *"அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர் ... தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்" (வ. 6-7). "வேதபாரகர்" என்றால் மோசேயின் பிரமாணத்தைப் பிரதி*

எடுக்கும் பொறுப்புள்ளவர்கள், என்று பொருள்.[22] வேதபாரகர்கள், நியாயப்பிரமாணத்தில் வல்லவர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் பழமையைக் காப்பவர்களாய், இயேசுவைச் சோதனை செய்ய அங்கு வந்திருந்தனர்.[23] எல்லாரும் இவர்களுடன் இணங்கிப் போவதால், இவர்கள் முன் வரிசை ஆசனங்களில் இருந்தனர்.

அவர்கள் தங்கள் இருதயங்களில், ''இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்?'' என்று சிந்தித்துக் கொண்டிருந்தனர் (வ. 7). ஒருவகையில் இது சரியானதே. சிலர், இயேசு நல்ல மனிதர்தான் ஆனால் தெய்வீகமுள்ளவரல்ல என்று இன்றைய நாட்களில் கூறுகின்றார்கள். ஆனால் இயேசு, தேவனில்லையென்றால், அவர் ஒரு தேவதூஷணம் கூறுபவராகவும், மரணத்துக்கு ஏதுவானவராகவும் இருப்பார்.[24] வேதபாரகரின் சிந்தனையில் அடுத்து வரவேண்டிய தர்க்கரீதியான வினா, "இயேசு தேவனாயிருக்க முடியுமா?" என்பதே. துரதிர்ஷ்டவசமாக, அவர்களுடைய தப்பெண்ணமானது அவர்கள் இப்படிச் சிந்திக்க அனுமதிக்கவில்லை.

அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: "நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன?'' என்றார் (வ. 8). இயேசு அவர்களைக் கலங்கப் பண்ணியிருக்க வேண்டும்![25] "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்லுவதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுவதோ, எது எளிது?'' (வ. 9). "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' என்று கூறுவது மிகவும் சுலபம்.

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் ..." (வ. 10) என்று தொடர்ந்து கூறினார் இயேசு. "மனுஷகுமாரன்" என்ற வார்த்தை மேசியாவைக் குறிக்க தானியேல் தீர்க்கதரிசியால் பயன்படுத்தப்பட்டது.[26] இயேசு அவரது தனித்தன்மையை வெளிப்படுத்தினார்! பூமியிலே பாவங்களை மன்னிக்க இயேசு ஒருவருக்கு மட்டுமே அதிகாரம் உண்டு.[27] ஏவப்பட்ட எழுத்துக்களின்படியாக, இவ்வதிகாரத்தை இயேசு

மூன்று முறை மட்டுமே பயன்படுத்தினார்.[28] அவருடைய அதிகாரத்தை உறுதி செய்ய, இயேசு திமிர்வாதக்காரனை நோக்கி, ''நீ உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்'' (வ. 11) என்றார்.

இயேசு, இம்மனிதனின் அடிப்படைப் பிரச்சனையான பாவத்தின் மீது தனக்குள்ள அக்கறையை நிரூபிக்க, அவனது அடுத்த பிரச்சனையான சுகவீனத்தின் மீது அக்கறை காண்பித்தார். பவுல், ரோமருக்கு எழுதின நிருபத்தில் இதே வகையான சிந்தனையைச் சுற்றி வளைத்துப்பேசுகிறார். "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி'' (ரோமர் 8:32). அதாவது, கர்த்தர் நமது அடிப்படைப் பிரச்சனையான பாவத்தைத் தீர்க்கவல்லவராயிருப்பதால், அவர் நமது அடுத்த பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்பதே இதன் பொருளாகும்.

''எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டிக்குப் போ'' என்று இயேசு சொன்ன பிறகு அங்கு நிலவிய நிச்சயமற்ற தன்மையைக் கற்பனை செய்து பாருங்கள்! எல்லாக் கண்களும் திமிர்வாதக்காரன் மேல் கவனமாயிருந்தன. ஒரு வேளை அவன் அப்படியே படுத்திருந்தால், "மேசியா வந்து விட்டார், என்று நாம் நினைத்தோம், ஆனால் மறுபடியும் நாம் ஒரு தவறு செய்து விட்டோம்'' என்று கூறி, அங்கிருந்த ஒவ்வொருவரும் வெட்கத்துடனும், அவநம்பிக்கையுடனும் கலைந்து சென்றிருக்கக் கூடும். இதற்கு மாறாக, அவன் எழுந்து, தன் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு, தன் கைகளில் அதை எடுத்துக் கொண்டு கதவுக்கு வெளியே நடந்தபோது என்னவாயிருக்கும்? இயேசு இந்த வாழ்க்கையில் உள்ள எந்த ஒரு பிரச்சனைக்கும் பதிலாயிருக்கிறார், என்று நிரூபித்தார்.

"உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான்'' (வ. 12அ)![29] புதிய ஏற்பாட்டின் மற்ற எல்லா அற்புதங்களைப் போலவே, இதுவும் முழுமையாக, உடனடியாக, ஏற்றுக்கொள்ளக்

கூடியதாக (இன்றைய நாட்களின் ''அற்புதங்கள்'' போல் இல்லாமல்) இருந்தது. சுவிசேஷங்களை எழுதியவர்கள், அற்புதங்களைக் கண்டவர்களின் பதில்செயலை தங்கள் முழு சொல்திறமையையும் பயன்படுத்தி வெளியாக்குகின்றனர். மாற்கு, ''அப்போது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை, என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' (வ. 12ஆ) என்று கூறினார். மத்தேயு, ''ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' (மத்தேயு 9:8) என்று குறிப்பிட்டார்; லூக்கா, ''அதனாலே எல்லோரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்'' (லூக்கா 5:26) என்றார்.[30]

இயேசு, இந்த வாழ்க்கையின் எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வாய் இருந்ததை - இருப்பதை - நிரூபித்துக் காட்டியுள்ளார்.

## முடிவுரை

தற்சமயம் நீங்கள் எந்த ஒரு பிரச்சனையில் துன்பப் பட்டாலும், இயேசு அதில் உங்களுக்கு உதவ முடியும். சில பிரச்சனைகளில், திமிர்வாதக்காரனைக் குணமாக்கியது போல, அவர் உங்களை விட்டு பிரச்சனைகளை நீக்கக் கூடும். ஆனால் அது போன்ற அற்புதங்கள் அவரால் இன்றைய நாட்களில் செய்யப்படுவதில்லை. ஆனால் அவரது பணி இன்றும் உலகில் தெய்வீகமான முறையில் நடக்கிறது.[31] அநேக சமயங்களில் அவர் உங்கள் பாவங்களைச் சுமந்து ஜெயங்கொள்ள வேண்டிய பலத்தை உங்களுக்குத் தருகிறார்.

கர்த்தருடைய உதவியை நீங்கள் விரும்பினால், அவரோடு உங்களுக்குள்ள உறவை நீங்கள் நேர்மையாய் பரிசீலனை செய்ய வேண்டும். இயேசு, உங்கள் ஆவிக்குரிய ஆரோக்கியத் தில் முதலாவது மிகுந்த அக்கறையாய் இருக்கிறார். நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை அறிக்கை செய்து, உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுகுதல்)

பெறவேண்டியது அவசியம் (மாற்கு 16:16; அப். 2:38). நீங்கள், தேவனுடைய பிள்ளையாய் இருந்தும், நன்றியில்லாமலிருந்தால், மனம் வருந்தி, இப்பொழுதே ஜெபித்து, கர்த்தரிடமும் அவர் சபையிடமும் திரும்ப வேண்டும் (அப். 8:22; யாக்கோபு 5:16).

தேவனோடு உங்கள் உறவு சரியாகும்போது, இதற்கு முன்னிராத அநேக உதவி ஆதாரங்கள் உங்களுக்கு உண்டாகும்; உங்கள் மீது உண்மையான அக்கறை செலுத்துபவர் ஒருவர் இருப்பார். இதற்கு முன் இராத பலம் உங்களுக்கு இருக்கும். உங்கள் பிரச்சனைகளைத் தீர்க்க தேவையான ஞானத்தைத் தருவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (யாக். 1:5). உங்களுக்கு உதவி செய்து, தாங்கக் கூடிய ஆவிக்குரிய குடும்பமாக இருக்கும் சபையார் உங்களுக்குக் கிடைப்பார்கள்.

இயேசுவே - அவர் ஒருவரே நமக்கு தீர்வாயிருக்கிறார் (யோவா. 14:6). நீங்கள் அவரை மறுதலித்தால், உறுதியான, திருப்தியான தீர்வு உங்களுக்கில்லை, மாறாக இருளும், குழப்பமும் மிஞ்சும். இப்பொழுதே இயேசுவிடம் வாருங்கள்!

---

குறிப்புகள்

[1]"வீடு" என்பது பேதுருவின் மாமியுடைய வீடாயிருக்கலாம். [2]நான் ஒக்லஹாமாவில் வளர்ந்த பொழுது, நடுங்கும் கைகளுடையவர்கள் தங்களுக்கு வாத நோய் ஏற்பட்டதாகக் கூறுவதைக் கேட்டுள்ளேன். இந்த எளிய மனிதன் அவ்வகை வியாதியுள்ளவன் அல்ல. [3]சார்லஸ் கே. எர்ட்மேன், மாற்கு எழுதின சுவிசேஷம் (பிலதெல்பியா வெஸ்ட்மினிஸ்டர் பிரெஸ், 1964), 50. [4]வசனம் 10ல் "அதிகாரம்" என்றுள்ளது. [5]என் குடும்பம் முழுவதும் இவ்விளம்பரத்தை உண்மையில் நம்பிற்று! ஆஸ்திரேலியாவிலிருந்து நாங்கள் திரும்பின சில வருடங்களுக்குப் பின்பு, எனது நடுமகள் மறுபடியும் ஆஸ்திரேலியா சென்று மூன்றாண்டுகள் அங்கு இருந்தாள். பின்பு என் மூத்த மகள் மணமுடித்து, மேய்ன் நகர் சென்றாள். எனது இளைய மகள் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்பு, இளையோர் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கிலம் கற்பிக்க ஜப்பான் சென்றாள். இப்போது என் மூத்த மகள், அவள் குடும்பம் முழுவதும் ரோமானியாவில் உள்ளனர். இவர்களை தொடர்பு கொள்ளுவதும் ஒருவகையில் தேடுவது தான். [6]அநேக அமெரிக் கர்கள் ''யாரேனும் சிலரை அடைந்து அணுகுதல்'' என்ற இப்பதத்தின் பொருள், நல்லவர்களை மட்டுமேயன்றி, மோசமான, அழகற்றவர்களை அணுகுதல் அல்ல என்று நன்றாய் அறிவார்கள். [7]இவ்விஷயத்தில் சிலர் நான் சொல்வதை மறுக்கக்கூடும். ஆனாலும், மரித்தவனை ஒரு வார்த்தையால் எழுப்பின இயேசு, குஷ்டரோகியை ஒரு

வார்த்தையால் குணமாக்கின இயேசு, இவனையும் ஒரு வார்த்தையால் குணமாக்கியிருக்க முடியும். [8]நாம் இயேசுவினிடத்தில் உதவிபெற வரும் போதெல்லாம், வழியில் ஒரு கூட்டம் இருக்கிறது. ஏதாவதொன்று நம்மை இடைமறிக்கும்படி சாத்தான் தூண்டி விடுகிறான். நாம் படித்த வேத பகுதியில் உள்ள அந்த நான்கு பேரைப் போலவே நாமும் இயேசுவை அடைய ஏதாவது செய்ய வேண்டியவர் களாயிருக்கிறோம். [9]ஒரு வேளை இது சபையில் நடந்திருந்தால், "இதைச் செய்து முடிக்க ஒரு குழுவை நியமிப்போம்... பின்பு அக்குழு தனது திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கட்டும்... பின் மூன்று வாரங்களில் அத்திட்டத்தை மதிப்பிட மறுபடி கூட்டம் கூடலாம்'' என்று நான் ஆலோசனை கூறியிருப்பேன். [10]இந்த பாடப் பகுதியின் மூன்று முக்கிய கருத்துக்களும் வில்லியம் பார்க்லேயின் மத்தேயு சுவிஷேம் பாகம் 1, அன்றாட வேதவாசிப்பு தொகுதி (பிலதெல்பியா; வெஸ்ட் மினிஸ்ட்டர் பிரெஸ், 1956) என்ற நூலிலிருந்து தழுவப்பட்டடை யாகும்.

[11]ஆறு குடும்பங்கள் கொண்ட குழுவோடு நான் ஆஸ்திரேலியா சென்றிருந்தேன், துவக்கத்தில், ஆறு மாத ஒப்பந்த அடிப்படையில், வசதிகளுள்ள வீடுகளைப் பெற்றோம். அதாவது, சராசரியாக ஒவ்வொரு மாதமும் ஒரு குடும்பமாவது வீட்டை மாற்றிக் கொண்டிருக்கும். அந்த வீடுகளில் துணி வைக்கும் அலமாரிகள் இல்லை, எனவே நாங்கள் (மிக கனமுள்ள) துணி வைக்கும் அலமாரிகள் வாங்க நேர்ந்தது. ஒவ்வொரு முறையும் வீட்டை மாற்றும் போது அவைகளைத் தூக்கிச் செல்ல வேண்டும். சில சமயங்களில் மாடியில் அவற்றை தூக்கிச் செல்ல வேண்டும். இது மிகக் கடினமான வேலை. [12]லூக்கா 5ல் உள்ள இணை வசனத்தில் "... வீட்டின் மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள்'' (லூக். 5:19) என்றுள்ளது. எனவே அந்த வீட்டின் மேல் கூரை வேறோரு பாணியில் இருந்திருக்கும். அது எப்பொருளாயிருப்பினும், நான்கு பேரும் அந்தக் கூரையைப் பிரித்து தங்களது நண்பனை இயேசுவினருகில் இறக்கினர். [13]நானாக இருந்தால், ''எனது வீட்டு உரிமையாளரின் காப்புறுதித் தொகை இந்த வேலையைச் செய்யப் போதுமானதாகுமா'' என்று ஆச்சரியப்பட்டிருப்பேன். [14]சபையில் ஒரு விசேஷித்த சுவிசேஷக் கூட்டம் நடக்கிறதென்றால், சபையார் முதலாவது ஒரு விருந்திற்கு தங்கள் நண்பர்களைஅழைத்து அதன் பின் அந்த பிரசங்கத்தைக் கேட்கச் செய்ய லாம். இது ஒருவேளை "விலையேறப் பெற்றதாய்" இருக்கக் கூடும். இக்கதை யிலிருந்து ஒரு ஆலோசனையை நீங்கள் பெறக்கூடும். பின்வரும் ஆலோசனையும் சபை அங்கத்தினர்களுக்குத் தரப்படலாம்: நான்கு பேர் (ஒரு வேளை இரண்டு தம்பதிகள்) இணைந்து, இழந்து போன ஒரு ஆத்துமாவை, இந்த சுவிசேஷக் கூட்டத்தில் இயேசுவினருகில் அழைத்து வர முடியுமா? இயேசுவைத் தேடுகிறவர்களில் வெகு சிலரே இந்நால்வரின் உடன்படிக்கையை எதிர்க்கக் கூடும். [15]சபைக் கூரையைப் பிரிக்கும் வகைப்பட்ட எவ்வித விளக்கமும் இங்கு தரப்படலாம். [16]அமெரிக்கர்கள் பெரும்பாலும் தரையில் பாய் விரித்துப் படுக்கும் பழக்கமின்மையால், படுக்கும் பாய்க்குப் பதிலாக உடற்பயிற்சி விரிப்பு என்ற உதாரணத்தை சுலபமாகப்புரிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தியுள்ளேன். எதுவா

யிருப்பினும், கேட்பவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கம் அமைவது அவசியம். [17]மூல பாஷையில் Teknon என்றுள்ளது இங்கு "மகன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [18]ஒரு வார்த்தைக்குரிய அழுத்தத்தைக் காண்பிக்க நாம் பயன்படுத்துகிற அடிக்கோடிடுதல், விசேஷ வடிவமைப்பில் எழுதுதல் போன்றவற்றை கிரேக்கர்கள் கையாளவில்லை ஆனால் முக்கிய மான வார்த்தையை, வாக்கியத்தில் முதலாவதாக அல்லது இரண்டாவதாக எழுதுவதன் மூலம் அதற்குரிய அழுத்தத்தை வெளிப்படுத்தினர். [19]வேதாகமத்தின் நாட்களில் இது ஒரு பொதுவான கருத்தாக இருந்தது (யோபு 4:7; 27:5-10; லூக்கா 13:4; யோவான் 9:2). பால்வினை நோய்கள் போன்ற சில விஷயங்களில் பாவத்திற்கும், சரீர துன்பத்திற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. ஆனால் இங்குள்ள சம்பவத்தில் இந்த மனிதனுடைய சரீர மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்கிடையே நேரடித் தொடர்பு உண்டு, என்பதற்கான குறிப்பெதுவும் காணப்படவில்லை. [20]அநேக 'சூப்பர் ஸ்டார்'கள் தங்கள் நடிப்பைக் காணும், கவனிக்கும், அவர்களை ஆராதிக்கும் எல்லோருடைய இருதயங்கள் மற்றும் ஆத்துமாக்களை மாசுபடுத்து கின்றனர்.

[21]சில சமயங்களில் இத்துடன் நான் ஒரு நகைச்சுவையைக் கூறுவதுண்டு: "நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், அநேகர் இன்றைய நாட்களில் குற்றம் காணும் காரணத்தோடு ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். ஏதாவது ஒரு விஷயத்தில் குற்றம் காணவே அவர்கள் விரும்புகின்றனர்." [22]ஆங்கில வார்த்தைகளான "Scribe", "Scribble" ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள வார்த்தைகளாகும். [23]லூக்கா 5:17ல் கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும், நியாய சாஸ்திரிகளும், அங்கிருந்தனர், என்று குறிப்பிடப்படுகிறது (இணை வசனம் லூக்கா 5:21). எந்த ஒரு போதகரையும், சோதித்துப்பார்ப்பதில் தவறேதும் இல்லை (அப். 17:11). முன்பிருந்தது போலவே இப்பொழுதும்கூட முகத்திரையை கிழிக்க வேண்டிய போதகர்கள் அநேகர் இருக்கின்றனர் (1 யோவான் 4:1). நேர்மையான இதயத்தோடு இவர்கள் செயல்பட்டால், அது நன்றாகவே இருக்கும். இருப்பினும், இவர்கள் நேர்மையான இருதயம் கொண்டிருப்பதில்லை. [24]லேவியராகமம் 24:16. [25]வேதாகம குறிப்புகள் கூறுகிறபடி இயேசு ஒருவருக்கு மாத்திரமே ESP என்று சொல்லக்கூடிய இருதயங்களை படித்துணரக்கூடிய வல்லமை இருந்தது. ஜனங்கள் நினைத்ததென்ன என்பதை உடனே அறியக்கூடியவர் அவர். இன்றைய நாட்களில் இவ்வல்லமை தனக்கு இருப்பதாக கூறுகிற எவரும், தன்னை கர்த்தருக்குச் சமமாக ஆக்க முயற்சிக்கிறார்கள். [26]''மனுஷ குமாரன்'' என்ற பதம் சுவிசேஷங்களில் சுமார் எண்பது முறையும், மாற்கு சுவிசேஷத்தில் மாத்திரம் பதினான்கு முறையும் காணப்படுகிறது. இதுதான் மாற்கு சுவிசேஷத்தில் இப்பதம் முதலாவது பயன்படும் இடமாகும். [27]எப்பொழுதும் எந்த மனிதனுக்கும் பாவங்களை மன்னிக்க அதிகாரம் கொடுக்கப்படவில்லை. [28]மூன்று முறை என்பது இந்தச் சம்பவத்திலும், விபச்சாரத்தில் அகப்பட்ட ஸ்திரீயிடமும் (யோவான் 8:11), சிலுவையில் தொங்கின கள்ளனிடமும் (லூக்கா 23:43) ஆகும். [29]''எல்லாருக்கும்